## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.60/2021

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராமமூர்த்தி | மதம் | : இந்து |
| த/பெ | : ராமகிருஷ்ணம நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 66 | கிராமம் | : நரசிம்ம நாயுடு கண்டிகை |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**19.01.2026**
**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். பட்டா எண்.1561ன் என் பெயரில் உள்ள பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 27.08.2021ம் தேதியிட்ட வீட்டு வரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். **(வீட்டு வரி ரசீது வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 11.03.2021ம் தேதியிட்ட மின் கட்டண ரசீது இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(மின் கட்டண ரசீது வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 11.03.2021ம் தேதியிட்ட மின் கட்டண ரசீது இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(மின் கட்டண ரசீது வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. 09.07.2021ம் தேதியிட்ட மின் கட்டண ரசீது இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(மின் கட்டண ரசீது வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சொத்திற்கான புல வரைபடம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(புல வரைபடம் வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பிராதுடன் மாதிரி வரைபடம் தாக்கல்

செய்துள்ளேன். **(மாதிரி வரைபடம் வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சொத்திற்கான வில்லங்க சான்று இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(வில்லங்க சான்று வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 31.01.1994ம் தேதியிட்டு நானும் பிரதிவாதியும் கங்கம்ம நாயுடு வகையறாவிடம் இருந்து கிரையம் வாங்கிய கிரைய ஆவணம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)